நாள்.06.08.2024

**அசல் வழக்கு எண். 26/2019**

**வா.சா.1- பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

நான் யார் யார் பெயரில் அசல் வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் முத்துவேல் என்பவரின் பெயரில் மட்டும் அசல் வழக்கை தாக்கல் செய்துள்ளேன். இந்த வழக்கை தவிர வேறு வழக்கு ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் பட்டுக்கோட்டை சார்பு நீதிமன்றத்தில் ஒரு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். எந்த சர்வே எண்ணிற்கு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் தெரியாது. அதன் விஸ்திரணம் தெரியுமா என்றால் 2 மா. என்ன பரிகாரம் கேட்டு வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சொத்து எனக்கு வேண்டும் என வழக்கு தாக்கல் செய்துள்ளேன். பட்டுக்கோட்டை சார்பு நீதிமன்றத்தில் போடப்பட்டுள்ள வழக்கில் என்ன பரிகாரம் கேட்டுள்ளேன் என்றால் எங்களை ஏமாற்றி பெறப்பட்ட சொத்து என வழக்கு தாக்கல் செய்துள்ளேன். இந்த வழக்கில் கண்ட சொத்திற்கு தான் பட்டுக்கோட்டை சார்பு நீதிமன்றத்திலும் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். இரண்டு வழக்குகளையும் ஒரே நீதிமன்றத்தில் விசாரிக்க வேண்டுமென கோரி மனு தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. வழக்கு சொத்திற்குண்டான சிட்டா அடங்கல் வாங்கி தாக்கல் செய்துள்ளேனா என்றால் எனக்கு படிக்கத் தெரியாததால் அது பற்றி எனக்கு தெரியாது. நான், பழனிவேல், அமுதா ஆகியோர்கள் சேர்ந்து என்னுடைய மகன் பழனிவேலின் மகன்களான சக்திவேல், சத்தியராஜ் ஆகியோர்களுக்கு 23.06.2016 ல் ஒரு பதிவான செட்டில்மெண்ட் பத்திரம் எழுதிக்கொடுத்தேனா என்றால் முத்துவேல் செட்டியார் என்பவர் எழுதிக்கொடுத்தார். நான், கருப்பையன், அமுதா ஆகியோர்கள் சேர்ந்து கருப்பையன் மகன்களான மகேந்திரன், சிவக்குமார், மணிகண்டன் ஆகியோர்களுக்கு வழக்கு புல எண்ணில் 16 செண்டை 23.06.2016 ல் ஒரு செட்டில்மெண்ட் எழுதி வைத்துள்ளேனா என்றால் முத்துவேல் செட்டியார் தான் எழுதிக்கொடுத்தார். பழனிவேல் மகன்களுக்கும், கருப்பையன் மகன்களுக்கும் நான் செட்டில்மெண்ட் எழுதிக்கொடுக்கவில்லை என்றால் எழுதிக்கொடுக்கவில்லை. மேற்படி விவரத்தை நான் தாக்கல் செய்துள்ள வழக்குரையில் சொல்லவில்லை. பழனிவேல் மகன்களுக்கும், கருப்பையன் மகன்களுக்கும் எழுதிவைத்த செட்டில்மெண்ட் ஆவணத்தை ரத்து செய்ய நான் நடவடிக்கை ஏதேனும் எடுத்தேனா என்றால் எனக்கு எழுதப்படிக்க தெரியாததால் முத்துவேல் செட்டியார் என்ன எழுதிக்கொடுத்தார் என்று எனக்கு தெரியாது. சக்திவேல், சத்தியராஜ், மகேந்திரன், சிவக்குமார், மணிகண்டன் ஆகியோர்களுக்கு எழுதிக்கொடுத்த அசல் செட்டில்மெண்ட் பத்திரம் என்னிடம் உள்ளதா என்றால் இல்லை. பழனிவேல் மற்றும் கருப்பையன் பிள்ளைகள் பெயரில் பட்டா ஏற்பட்டுள்ளதா என்றால் இல்லை. பழனிவேல் மற்றும்

கருப்பையன் பிள்ளைகள் பெயரில் ஏற்பட்ட செட்டில்மெண்ட் பத்திரப்படி அவர்கள் அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரிதான்.

**பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின் பேரில் குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

*Taken down by the typist to my dictation in open Court read over to the witness admitted and acknowledged by him/her to be Correct.*

Sd/- M. Ravichandran,B.A.,B.L.,

District Munsif, Pattukkottai.